## தேர்ச்சி இரண்டு:-
## இறைவனின் வரங்களைப் பெறுவதற்காக அருளடையாளங்களைப் பெற்றுக் கொள்வர்

10

## 2.2. வாழ்வு வழங்கும் கிறிஸ்துவின் திருவிருந்து

தம் வயிற்றுப் பசியை நீக்க அவர் உணவு தருவார் என்ற காரணத்தினால் அநேக மக்கள் இயேசுவின் பின்னே சென்றனர். இன்றும், அப்படியான தேவைகளை எதிர்பார்த்து நாமும் அவரை நாடிச் செல்கிறோம். ஆனால், இயேசு இவ்வருங்குறி வழியாக முடிவில்லா வாழ்வைப் பெற ஆன்மீக உணவாகிய நற்கருணை அவசியம் என்பதை எமக்கு விளக்குகிறார்.

இயேசு மறுமொழியாக, நீங்கள் அரும் அடையாளங்களைக் கண்டதால் அல்ல, மாறாக, அப்பங்களை வயிறார உண்டதால்தான் என்னைத் தேடுகிறீர்கள் என உறுதியாக சொல்கிறேன். அழிந்துபோகும் உணவுக்காக உழைக்க வேண்டாம். நிலைவாழ்வு தரும் அழியாத உணவுக்காகவே உழையுங்கள். அவ்வுணவை மானிடமகன் உங்களுக்குக் கொடுப்பார்.

வாழ்வு தரும் உணவு நானே. என்னிடம் வருபவருக்குப் பசியே இராது என்னிடம் நம்பிக்கை கொண்டிருப்பவருக்கு என்றுமே தாகம் இராது' என்றார்.

(யோவா. 6:26-27, 35)



இலவச விநியோகத்திற்காக

## நற்கருணைப்பலி பல பெயர்களால் அழைக்கப்படுகிறது.

1. **நன்றி நவிலும் வழிபாடு**

இறைவனின் மேன்மையான படைப்பின், மீட்பின், புனிதமாக்கல் நிமித்தமாக இறைமக்கள் சார்பாக நன்றி செலுத்தப்படும் வழிபாடு திருப்பலியாகும். திருப்பலியைக் குறிக்கும் 'Eucharist' என்ற கிரேக்கச் சொல்லின் பொருள் 'நன்றி செலுத்துதல்' ஆகும்.

2. **இயேசுவின் திருவிருந்து**

இயேசுக்கிறிஸ்து தாம் பாடுபடுவதற்கு முந்தின நாள் இரவு, சீடர்களின் பாதங்களைக் கழுவி தன் உடலையும், இரத்தத்தையும், அப்பம் இரசம் வழியாக, அவர்களுக்கு உணவாக வழங்கினார்.

3. **பங்கேற்றலின் உணவு**

இறைவழிபாட்டிற்காக இறைமக்கள் திருப்பலியில் ஒன்றுகூடுகிறார்கள். இவ்வாறான சந்தர்ப்பங்களில் நாமனைவரும் ஒன்று கூடுவது எமது ஒற்றுமை உயிரூட்டம் உள்ளது என்பதைக் காட்டுகிறது.

4. **அப்பம் பிட்கும் வழிபாடு**

திருத்துதர் பணிகள் நூலில் இரண்டாம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளபடி முதல் கிறிஸ்தவர்கள் திருத்தூதரின் படிப்பினையைக் கேட்பதிலும், அப்பம் பிடுவதிலும், நட்புடன் உறவாடுவதிலும், செபிப்பதிலும் நிலைத்திருந்தபோது சகோதர அன்போடு அப்பம் பிட்பதிலும் ஈடுபட்டமை ஒரு முக்கிய நிகழ்வாக அமைந்தது.

**எம் வாழ்வில் பிறர் கிறிஸ்துவைக் காண முயற்சிப்போம்.**


இலவச விநியோகத்திற்காக

நற்கருணைக் கொண்டாட்டத்தில் திருமுழுக்கு, உறுதிப்பூசுதல் ஆகியவற்றில்நாம் பெற்ற கிறிஸ்தவ வாழ்வு ஊட்டம் பெறுகிறது.

## "எங்களோடு தங்கும் ஆண்டவரே."

லூக்கா 24:13-35ன் படி உயிர்த்த கிறிஸ்து அப்பத்தைப் பிட்டபோது எம்மாவுஸ் சீடர்கள் அவரைக் கண்டுகொண்டது போல, இன்றும் நாம் அப்பம் பிட்குதலில் இயேசுவைக் கண்டுகொள்கிறோம்.

**உரையாடல் ⟶ உறவு ⟶ தங்குதல் ⟶ அப்பம் பிட்குதல்**

- அப்பம் பிட்கும்போது தாம் பெற்றுக்கொண்ட உயிர்த்த கிறிஸ்துவின் அனுபவத்தை ஏனைய சீடர்களுடன் பகிர்ந்துகொள்ள அவர்கள் ஜெருசலேம் திரும்பினர்.

- உயிர்த்த கிறிஸ்துவை நற்கருணையில் அடையாளம் காண்கின்றோம்.
- திருப்பலி வேளையில் அவர் எப்பொழுதும் நம் மத்தியில் பிரசன்னமாக இருக்கிறார்.

எம்மாவுஸ் வழியில் உயிர்த்த கிறிஸ்து சீடரைச் சந்தித்தபோது அவர்களோடு பிரசன்னமாயிருந்து, அவர்களுக்குச் சக்தியை அருளுகிறார். அவர் அவர்களோடு

1. உரையாடினார்.
2. உறவுகொண்டார்.
3. தங்கியிருந்தார்.
4. அப்பத்தைப் பகிர்ந்துகொண்டார்.
5. வாழ்வு கொடுத்தார்.

இயேசு தனது உடலையும் இரத்தத்தையும் மற்றவர்களுக்காகத் தியாகம் செய்தது போல நாமும் எம்மோடு வாழுகின்ற அயலவர்களின் நல்வாழ்வுக்காக எம்மைத் தியாகம் செய்ய அழைக்கப்பட்டுள்ளோம். அயலவரை நாம் அன்பு செய்வதன் வழியாகவே இதனை நாம் வாழ்வாக்கிக் கொள்ளலாம்.



இலவச விநியோகத்திற்காக

**சிந்தனைக்கு :**

ஆகவே, எவராவது தகுதியற்ற நிலையில் இந்த அப்பத்தை உண்டால் அல்லது ஆண்டவரின் கிண்ணத்தில் பருகினால், அவர் ஆண்டவரின் உடலுக்கும் இரத்தத்திற்கும் எதிரான குற்றம் புரிகிறார். எனவே ஒவ்வொருவரும் தம்மையே சோதித்தறிந்த பின்பே இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்தில் பருக வேண்டும். ஏனெனில், ஆண்டவருடைய உடல் என உணராமல் உண்டு பருகுபவர் தம்மீது தண்டனைத் தீர்ப்பையே வருவித்துக் கொள்கிறார்.

(1கொரி. 11:27-29)

நீர் உம்மை
தியாகம் செய்ய,
பகிர,
பணிபுரிய
ஆயத்தமா?.....



**நினைவில் வைத்திருக்க :**

இச்சின்னஞ்சிறிய இச்சகோதரரில் ஒருவருக்குச் செய்தபோதெல்லாம் நீங்கள் எனக்கே செய்தீர்கள்.''

- நாம் அயலவரில், உதவி தேவைப்படுவோரில் கிறிஸ்துவைக் காண வேண்டும்.
- நாம் செய்யும் நற்செயல்களால் என்னில் கிறிஸ்து வாழ்கிறார் என்பதைப் பிறர் அறிதல் வேண்டும்.
- அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து அதன்படி வாழ வேண்டும்.

**சிந்தனைக்கு :**

- எமது கிராமத்துக்கு வருகின்றவர் எம்மைப் பார்த்து இவ்வாறு கூறமுடியுமா?

  - ''அதோ பாருங்கள் கிறிஸ்தவர்கள்! அவர்களது வாழ்க்கையிலிருந்து இதை நான் அறிந்து கொண்டேன்.''
  - ''இது கிறிஸ்தவன் செய்யும் நற்செயல்.''
  - ''கிறிஸ்து நீதியானவர் என இவர்களது செயலிலிருந்து நான் அறிந்து கொண்டேன்.''
  - ''இவர்கள் எப்பொழுதும் உண்மையுள்ளவர்கள், நீதியானவர்கள், தியாகம் செய்பவர்கள்.''

எமது எதிர்கால மகிமையை நற்கருணை உறுதிப்படுத்துகிறது என தெளிவாக அறிந்து கொள்வோம்.

**நீர்**

**பிறருக்காக உம்மை தியாகம் செய்ய, உடைக்க,
பகிர்ந்து கொள்ள,
அர்ப்பணிக்க தயாராக உள்ளீரா?**

நற்கருணை விருந்தில் பங்குகொள்வதால் நான்

1. சுயநலம் மறுத்து பொதுநலம் தேடுவேன்.
2. தியாக வாழ்வு வாழ்வேன். (பிறருக்கு என்னை அர்ப்பணிப்பேன்.)
3. அநீதிக்கெதிராகக் குரல் கொடுப்பேன்.
4. சமுதாயத்தில் ஒதுக்கி வைக்கப்பட்டோருடன் அன்புறவு கொள்வேன்.
5. பசி, தாகத்தோடு இருப்பவர்களுக்கு உதவி செய்வேன்.



இலவச விநியோகத்திற்காக

அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாக இருக்கிறோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்கு கொள்கிறோம்.

(1கொரி. 10:17)

எவராவது சாவான பாவநிலையில் இருப்பதை அறிந்தால் நற்கருணை பெறுமுன் ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெற வேண்டும்.

கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி # *1385*


கடைசி இராவுணவின்போது எமது மீட்பர் தன் உடலும் இரத்தமும் கொண்ட, நற்கருணைப் பலியை ஏற்படுத்தினார். தான் மீண்டும் வரும்வரை சிலுவைப் பலியைத் தொடர்ந்து நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகவே அவர் இதைச் செய்தார். தனது மணவாட்டியான திருச்சபைக்கு தனது இறப்பு, உயிர்ப்பின் நினைவாக அதைச் செய்யும்படி கூறினார். ‘‘அன்பின் அடையாளம்’’ ‘‘ஒற்றுமையின் அடையாளம்’’ சகோதரத்துவத்தின் பிணைப்பு’’ ஆக விளங்கும் பாஸ்கா விருந்தில் கிறிஸ்துவே உட்கொள்ளப்படுகிறார். எமது உள்ளம் அருளால் நிரப்பப்படுகிறது. எதிர்கால மகிமையின் உத்தரவாதம் எமக்குத் தரப்படுகிறது.

கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி # *1323*



இலவச விநியோகத்திற்காக

## நற்கருணை வாழ்வு - சாட்சி பகரும் வாழ்வு






இலவச விநியோகத்திற்காக

**நற்கருணையை உட்கொள்வதால்**
**உமது வாழ்வை நிறைவுள்ளதாக்குகிறீர்.**
**கிறிஸ்தவ வாழ்வுக்கு அர்த்தம் கொடுக்கிறீர்.**

**மேலதிக அறிவிற்காக :**

- யோவான் 6:22-59.
- 1கொரிந்தியர் 11:23-34.
- யோவான் 15:13.
- 2ம் வத்திக்கான் சங்க ஏடு - திருவழிபாடு இல. 47-58.
- ''ஆண்டவரே எம்மோடு தங்கும்'' (2ம் அருள் சின்னப்பர் திருத்தந்தையின் சுற்றுமடல்).

ஆண்டவரே எங்களோடு தங்கும்

''ஆண்டவரே தேவரீர் வருமளவும் உமது
மரணத்தை அறிக்கையிடுகின்றோம்.
உமது உயிர்ப்பையும்
எடுத்துரைக்கின்றோம்.''

**உங்கள் வாழ்க்கைக்கு...**

நற்கருணை ஆராதனை, நற்கருணைச் சந்திப்பு, திருப்பலியில் பங்கேற்பு இவைகளால் எம் நற்கருணைப் பக்தியை வளர்த்துக் கொள்வோம். இறைபிள்ளை என்னும் தகைமையோடு கிறிஸ்தவ செயற்பாடுகளை முன்னெடுக்க நற்கருணை விருந்தில் பங்கெடுப்போம்.

## நற்கருணைப் பாடல்

நானே வானினின்று இறங்கி வந்த
உயிருள்ள உணவு - இதை
யாராவது உண்டால் - அவன்
என்றுமே வாழ்வான் - அவன்
என்றுமே வாழ்வான்.

1. எனது உடலை உண்ணும் எவரும்
பசியை அறிந்திடார் ஆ...ஆ...ஆ...ஆ..ஆ
எனது உடலை உண்ணும் எவரும்
பசியை அறிந்திடார் - என்றும்
எனது குருதி பருகும் எவரும்
தாகம் தெரிந்திடார்.

2. மன்னா உண்ட முன்னோர் எல்லாம்
மடிந்து போயினர் ஆ...ஆ...ஆ...ஆ..ஆ
மன்னா உண்ட முன்னோர் எல்லாம்
மடிந்து போயினர் - உங்கள்
மன்னன் என்னை உண்ணும் எவரும்
மடிவதே இல்லை.

(பரமனுக்குப் பண்ணிசை # 121)

- இப்பாடலைத் தியானிக்கவும்



இலவச விநியோகத்திற்காக

**விடை எழுதுக.**

1. மத்தேயு 26:26-30 என்ற பகுதியைத் தியானிக்கவும். இறுதி இராப்போசனம் நிகழ்ந்த விதத்தை விளக்குக.

2. நற்கருணைத் திருவிருந்து முறையானது படிப்படியாக வளர்ச்சியடைந்த விதத்தை சுருக்கமாக விளக்குக.

3. ''இறை வாழ்வின் உணவு'' என்பது யாதென சுருக்கமாக விளக்குக.

4. நற்கருணையின் மூலம் ஊட்டம் பெற்ற நீர் உமது வாழ்வை பணிக்காக அர்ப்பணித்த சந்தர்ப்பங்கள் நான்கைக் குறிப்பிடுக.

5. எம்மாவு பயணத்தின்போது கிறிஸ்து தம்மை சீடர்களுக்கு அறிமுகப்படுத்திய முறையை விளக்கி, உமது வாழ்வில் நீர் கிறிஸ்துவை அறிந்துகொண்ட சந்தர்ப்பங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

**சிந்தனைக்கு**

அவர்கள் அவரிடம், எங்களோடு தங்கும் ஏனெனில் மாலை நேரம் ஆயிற்று பொழுதும் போயிற்று என்று கூறிக் கட்டாயப்படுத்தி அவரை இணங்கவைத்தார்கள். அவர் அங்கு தங்குமாறு அவர்களோடு சென்றார்.

(லூக். 24:29)